# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2064/41 - 2018 මාර්තු 29 වැනි බ්‍රහස්පතින්දා- 2018.03.29

*2064/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், மருதானை கிராமத்தில் அமைந்துள்ள, சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் 2016.07.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட சீஓ/டீஎஸ்ஓ/2016/274 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டுகள் 'ஏ', 'பி' எனக் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' – மருதானை வீதி, வரிமதிப்பீட்டு இல. 191/1 இருந்து 191/21 – விஸ்தீரணம்: 0.0940 ஹெக்டயார்**

வடக்கு: பள்ளிய வத்தை மற்றும் வளவ்வத்தை; கிழக்கு: பள்ளிய வத்தை மற்றும் கலந்த சாஹிப் ஜும்மா பள்ளிவாசல் வளவு; தெற்கு: கலந்த சாஹிப் ஜும்மா பள்ளிவாசல் வளவு மற்றும் துண்டு பீ; மேற்கு: பள்ளிய வத்தை (940ச.ப.).

02. **துண்டு 'பி' – மௌலானவத்தை வீதி – விஸ்தீரணம்: 0.0261 ஹெக்டயார்**

வடக்கு: பள்ளிய வத்தை மற்றும் துண்டு ஏ; கிழக்கு: கலந்த சாஹிப் ஜும்மா பள்ளிவாசல் வளவு மற்றும் கலில் வைத்தியசாலை வளவு; தெற்கு: கலில் வைத்தியசாலை வளவு மற்றும் மருதானை வீதி ; மேற்கு: மௌலானவத்தை வீதி மற்றும் பள்ளிய வத்தை (261ச.ப.).

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : எல்/03/9/என்எச்/382.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல.
2018, பெப்புருவரி 14.

4-516

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், மெத்தேகெடிய கோரளை

சிறுபிரிவில், இல. 1128 ஆம் இலக்க மெதல்பொல கிராம அலுவலர் பிரிவில், ஹொதிவெவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2017.02.15 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கேயு/கேபிஈ/ 2017/034 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் 0.0149 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'அ' – அட்டிக்காகஹமுல இல. 2 – விஸ்தீரணம்: 0.0149 ஹெக்டயார்**

வடக்கு: டபிள்யூ. எம். ஹேமசிறி விக்கிரமசிங்ஹ உரிமை கோரும் அட்டிக்காகஹமுல ; கிழக்கு: எச். எம். புஞ்சி பண்டா மற்றும் எச். எம். எஸ். எஸ். ஹேரத் உரிமை கோரும் அட்டிக்காகஹமுல ; தெற்கு: எச். எம். புஞ்சி பண்டா மற்றும் எச். எம். எஸ். எஸ். ஹேரத் உரிமை கோரும் அட்டிக்காகஹமுல மற்றும் பாதை ; மேற்கு: பாதை மற்றும் டபிள்யூ. எம். ஹேமசிறி விக்கிரமசிங்ஹ உரிமை கோரும் அட்டிக்காகஹமுல.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/8/2016/பிசீ/509.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல,
2018, சனவரி 25.

4-517

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.